**தலைப்பு - 263 - அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) அம்பாந்தோட்டை
(ஆ) அம்பலாந்தோட்டை
(இ) திஸ்ஸமஹாராம
(ஈ) லுணுகம்வெஹர
(உ) சூரியவெவ
(ஊ) அங்குனுகொலபெலஸ்ஸ
(எ) தங்காலை
(ஏ) பெலியத்த
(ஐ) ஓகெவெல
(ஒ) வீரகெட்டிய
(ஓ) வலஸ்முல்ல
(ஔ) கட்டுவன

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர்,

ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,005 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,003 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தின் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 2 மில்லியன் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.2 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 609 | 608 | 1 | 0.16 |
| மூலதனம் | 396 | 395 | 1 | 0.25 |
| மொத்தம் | 1,005 | 1,003 | 2 | 0.2 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 33 அமைச்சுக்களிடமிருந்தும் 20 திணைக்களங்களிடமிருந்தும் முறையே ரூபா 2,772.15 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2,256.86 மில்லியன் தொகையுமாக ரூபா 5,029.01 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த நிதிஏற்பாட்டில் முறையே ரூபா 2,748.17 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2,193.38 மில்லியன் தொகையுமாக ரூபா 4,941.55 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 11 அமைச்சுக்களால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 23.98 மில்லியன் தொகையும் 08 திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 64.32 மில்லியன் தொகையுமான நிதிஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. 05 திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் ரூபா 0.84 மில்லியன் தொகையால் விஞ்சி பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26301 | 35 | 35 | 25 | 27 | 155 | 140 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 983 மில்லியன் தொகையாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6003/0000/00/0039/0000/000 | 683 |
| 6000/0000/00/0011/0598/000 | 300 |
| | 983 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தினது ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 263- அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்டச் செயலகத்தினால் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 112,745,040 ஆக இருந்தது.

### 3.3 எல்லைகளைப் பின்பற்றாமை

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் 26301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த செலவினங்களின் ஆகக் கூடிய எல்லை ரூபா 35,000,0000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுமதி ரூபா 35,007,619 ஆக இருந்தமையால் ரூபா 7,619 ஆல் செலவினங்களின் ஆகக்கூடிய எல்லை மிகைத்துக்காட்டப்பட்டிருந்தது.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.4.1 பாதீட்டு முரண்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சேதங்கள், நட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மாவட்டச் செயலகத்திலும் 05 பிரதேச செயலகங்களிலும் 1987 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றிருந்த ரூபா 13,752,451 தொகையான 12 சேதங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சில வருடங்களாக ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்நட்டங்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 1,631,903 தொகையான 04 சேதங்கள் தொடர்பாக விசாரணை அறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 3.4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள்

வெவ்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு ரூபா 42,281,686 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிஏற்பாட்டு எல்லைகளை ரூபா 839,146 தொகையினால் விஞ்சி ரூபா 43,120,832 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி மாவட்ட செயலகத்தினால் வர்த்தக ரீதியில் கோழி வளர்ப்பு பண்ணைகளை உருவாக்குவதற்காக திஸ்ஸமஹராம தேர்தல் பிரிவின் 05 பிரதேச செயலகங்களின் பிரதேசத்தில் வசிக்கும் 100 பயனாளிகள்

வீதம் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு 200 கோழிக் குஞ்சுகள் என்ற ரீதியில் 100,000 கோழிக் குஞ்சுகள் வளர்ப்பதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 71,675,750 செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 46,000 கோழிக் குஞ்சுகளுக்காக ரூபா 34,500,000 கூட்டுப் பெறுமதியான 10 காசோலைகள் 25 கிலோகிராம் வளர்ச்சி ஆகாரம் 6,900 பக்கற்களுக்காக ரூபா 13,627,500 கூட்டுப்பெறுமதியான 05 காசோலைகளும் எழுதப்பட்டு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் அக்காசோலைகள் நிறுத்தி வைத்திருக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 48,127,500 பெறுமதியான கோழிக் குஞ்சுகள் மற்றும் வளர்ச்சி ஆகாரங்கள் என்பவற்றை உரிய ஒப்பந்தக்காரரால் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

அத்தோடு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 12,377 கோழிக் குஞ்சுகளுக்காக 45 நாட்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறித்த வளர்ச்சி ஆகாரத்தின் அளவு 40,312 கிலோகிராமாக இருந்த போதிலும், அந்த அளவினை மிகைத்து அதாவது 6,188 கிலோகிராம் வழங்குவதற்காக ரூபா 488,852 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் செங்கல் கைத்தொழிலாளர்களை மேம்படுத்துவதற்காக மாகாண எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,598,750 தொகையும் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 895,185 தொகையுமாக ரூபா 3,493,935 தொகை செலவிடப்பட்டு 34 கேஜ் தடிப்பிலான 6500 தகரங்கள் கொள்வனவு செய்வதற்கு அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் கொள்வனவுக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் கொள்வனவுக் குழுவிற்கு ரூபா ஒரு மில்லியனுக்கு உட்பட்ட கொள்வனவுகளுக்கு அங்கீகாரம் வழங்க முடியுமாக இருந்த போதிலும், அந்த எல்லையை விஞ்சி இக்கொள்வனவிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ் இரண்டு சிறுவர் பூங்காக்களுக்கு ரூபா 124,000 தொகை செலவழித்து இரண்டு வட்ட ஊஞ்சல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த இரண்டு சிறுவர் பூங்காகளுக்காக 5 வழுக்கும் பாலங்கள் மற்றும் 4 மெரிகோரவுன்ட் கொள்வனவு செய்வதற்கு

தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி குறித்த வழங்குனருக்கு ரூபா 102,200 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) 02 பிரதேச செயலகங்களினால் 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி ரூபா 5,063,466 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் பிரதேச செயலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) பெலிஅத்த பிரதேச செயலகத்தின் 2013 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 94,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உடற்பயிற்சி உபகரணத் தொகுதியொன்று பெலிஅத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்படாதிருந்த விளையாட்டு கழகமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த உடற்பயிற்சி உபகரணத் தொகுதி வெளிநபரொருவரின் பொறுப்பில் இருந்தமை 2014 செப்தெம்பர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) 2014 ஆம் ஆண்டின் போது அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் கிராமிய பாடசாலைகளுக்கு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பந்தகிரிய வித்தியாலயத்தின் ‘‘கருணா’’ கட்டிடம் மீளமைப்புச் செய்யும் நிர்மாணம் ரூபா 2,423,774 ஆன உடன்படிக்கைத் தொகைக்கு தனியார் நிர்மாணக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,181,397 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டு உருப்படி இலக்கம் 2.20 இன் கீழ் 3 அங்குல தடிப்பிற்கு நிலம் மற்றும் மேற்பரப்பிற்கு கொங்ரீட் இட்டு நிலம், தரை மற்றும் ½ அங்குலத்திற்கு சாந்துபூசி சீமெந்து பூசுதல் நிர்ணயித்த படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் கட்டிடத்தின் மேற்பரப்பு மற்றும் சுற்றியுள்ள பகுதி வெடித்து சாந்து கழன்று மற்றும் சுற்றியுள்ள பகுதி என்பவற்றில் குழிகள் தோன்றியிருந்ததுடன் அதற்காக ரூபா 685,883 தொகை மேற்படி கொடுப்பனவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஏ) மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் 2012 திசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சி காரணமாக பாதிப்பிற்குள்ளான பந்தகிரிய பன்சல்வத்த வயல்வெளிகளுக்கு நீரைக் கொண்டு செல்லும்

வாய்க்கால் மீள அமைக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீடொன்றைத் தயாரிக்காமலும் செயற்திட்ட உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமலும் அவசர கொள்வனவொன்றாக கருதி தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் 2013 நவம்பர் மாதத்தின் போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 2014 மே 23 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 525,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தக்காரரால் நிறைவேற்றப்பட்ட வேலையின் பெறுமதியை மிகைத்து ரூபா 269,280 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் தேசிய பாதுகாப்பு தினம் 2014 இற்கு இணையாக அனர்த்தங்களுக்கு இணங்கிச் செல்லக்கூடிய வீடுகளை அமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்திற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ரூபா 500,000 நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது. யஹங்கல மேற்கில் வசித்துவரும் பயனாளி ஒருவருக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அந்நிதி ஏற்பாட்டிலிருந்து முதலாவது தவணைப் பணமாக ரூபா 250,000 தொகை 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அவ்வீட்டில் செய்யப்பட்ட வேலை பெறுமதி தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையொன்றில்லாமல் வீடைமப்பு குழுவின் பரிந்துரையின் பேரில் மாத்திரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி தவணையாக ரூபா 250,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் நலனாளியால் வீட்டின் நிர்மாணம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறு வீட்டின் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 256,641 தொகையென பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஒ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் அனர்த்தங்களினால் பாதிப்பிற்குள்ளான வீடுகளுக்காக உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 பயனாளிகளுக்கு இரண்டு தவணைகளுக்காக எழுதப்பட்டிருந்த ரூபா 300,000 பெறுமதியான 06 காசோலைகள் 2015 பெப்ரவரி மாதத்தின் போது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு அறநெறிப் பாடசாலை சமய நடவடிக்கைகளுக்காக 2012 யூலை 10 ஆந் திகதி ரூபா 100,000 தொகை பௌத்த விவகார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் குறித்த நிகழச்சித்திட்டங்களை செயற்படுத்தாமல் அந்நிதிஏற்பாடு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களைக் கடந்த ரூபா 967,969 ஆன வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்களிடமிருந்தும் திணைக்களங்களிடமிருந்தும் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 57,340,512 தொகைக்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதிய PF/FD/04/148 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் தானிய உற்பத்திக்காக சுழற்சி நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு ரூபா 300 மில்லியன் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டு 6000/0000/000/0011/0598/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இக்கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் அது செயற்படாத வைப்பொன்றாக காணப்பட்டது.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

26301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,179,947 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து கொண்டுவரப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டு இருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 01 | 03 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் (முச்சக்கரவண்டி) | 01 | 08 |
| (iii) | இயந்திரங்கள் | 01 | 13 |

### 3.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மைகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிராமணக் கோவை | | |
| நிதிப் பிரமாணம் 137, 138, 139 மற்றும் 237 | 3,092,987 | மாவட்ட செயலகத்தின்னால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத |

| | |
|---|---|
| | கொடுக்கல் வாங்கல்களுக்காக 31 காசோலைகள் எழுதப்பட்டு கணக்காய்வு திகதியான 2015 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் அக் காசோலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| 3,275,274 | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெறாத பொருட்களுக்காகவும் 31 காசோலைகள் எழுதப்பட்டு கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் பெறுநருக்கு கையளிக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| 595,825 | அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் களுக்காகவும் களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெறாத பொருட்களுக்காகவும் 04 காசோலைகள் எழுதப்பட்டு கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 09 ஆந் திகதி வரையிலும் பெறுநருக்கு கையளிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| 3,909,650 | 08 பிரதேச செயலகங்களினால் சாரதிப் பயிற்சி வழங்குவதற்காக சாரதிப் பாடசாலைகளுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எழுதப்பட்டிருந்த 11 காசோலைகள் கணக்காய்வு திகதியான 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அத்திகதி வரையிலும் குறித்த சாரதிப் பாடசாலைகளால் |

| | | | |
|---|---|---|---|
| | | | பயனாளிகளுக்கு சாரதிப் பயிற்சி வழங்கி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 215(3)(அ) | 651,240 | 05 பிரதேச செயலகங்களினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்டிருந்த 159 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. |

### 3.9 உள்நாட்டு நிதி மூலங்களின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

#### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்ட பிரதேச செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| புதிய பாலம் முதல் பழைய பாலம் வரை கோப்பிவத்த வீதி அமைக்கப்பட்டு கொங்கிரீட் இடல் | 995,655 | 2014.08.28 | உடன்படிக்கை செய்யப்பட்ட சங்கத்தினால் ஆண்டின் இறுதி வரை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| வகமுல்ல வயல் வெளியில் துப்பஹிகே லியத்த அருகில் அணைக்கட்டு நிர்மாணித்தல் | 289,729 | 2014.07.30 | இது வர்த்தக ரீதியான செயற்திட்டமொன்றாகும். அறுவடை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்த போகத்திற்காக துரிதமாக நீரை வழங்கியதன் காரணமாக இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| ரணசிங்ஹபுர எம்.ஆர்.எம்.காசீம் வித்தியலாயத்திற்கு 60x20 கட்டிடமொன்று நிர்மாணித்தல் | 194,000 | - | உரிய உறுப்பினரால் முன்மொழிவு திருத்தம் செய்யப்படாமை |
| ரணவராவ இத்திகொலே வீதி இரண்டாவது ஒழுங்கைக்கு குடிநீர் வழங்கல் | 150,000 | | மதிப்பீட்டை கொண்டு வர முடியாமை |

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

#### (அ) அரச கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளை பின்பற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்காக ஒகெவெல பிரதேச செயலகத்தினால் ரூபா 1,500,000 பெறுமதியான 02 கொள்வனவுத் தீர்மானங்களுக்காக கொள்வனவுக் குழுவின் மூன்றாவது அங்கத்தவர் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ii) வலஸ்முல்ல பிரதேச செயலகத்தினால் 2014 நவம்பர் 10 ஆந் திகதியளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,598,824 பெறுமதியான 08 செயற்திட்டங்களுக்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1, 8.9.2 மற்றும் 8.9.3 ஆம் வழிகாட்டகளின் பிரகாரம் முறைப்படி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டல் மற்றும் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மாவட்ட கொள்வனவுக் குழுவிற்கு சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் ரூபா 2 மில்லியனுக்கு கொள்வனவு அங்கீகரிக்கப்பட முடியுமான போதிலும், வீரகெட்டிய பிரதேச செயலகத்தினால் அந்த எல்லையினை மிகைத்து ரூபா 4,250,241 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக 2014 திசெம்பர் 27 மற்றும் 28 ஆகிய இரண்டு தினங்களில் காணி நடவடிக்கைகள் மற்றும் செயற்திறனை அதிகரிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அதற்காக சமூகமளித்த 230 உத்தியோகத்தர்களுக்காக உணவு வழங்குவதற்கு ரூபா 151,800 பெறுமதியான காசோலையொன்று தனியார் ஹொட்டேல் ஒன்றின் பெயரில் எழுதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையிலும் குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட மழை காரணமாக தம்மன்னாவ குளத்தின் குளக் கட்டு மற்றும் பரகும் விவசாய அமைப்பின் கீழ் இருக்கும் அலுத்வெவ கட்டினை புனரமைக்கும் நிர்மாணம் 2013 நவம்பர் 04 ஆந் திகதி முதல் 10 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்காக கிரய மதிப்பீடொன்றும் ஒப்பந்த உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்படாமல் விவசாய அமைப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்படாமல் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 525,000 தொகை 2013 நவம்பர் 12 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி மாவட்ட செயலாளரினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் மேற்குறித்த இரண்டு குளக் கட்டுகளையும் புனரமைப்பதற்கு 150 மணித்தியால எக்ஸ்கவேட்டர் மீற்றருக்காக மணித்தியாலமொன்றுக்கு ரூபா 3,500 வீதம் ரூபா 525,000

நிதிஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக்கடிதத்திற்கு முரணாக 05 வைப்பிரேட்டர் இயந்திர மணித்தியாலங்களையும் 45 உழவு இயந்திர மணித்தியாலங்களையும் பயன்படுத்தியமைக்காக ரூபா 232,500 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பௌதீக பரிசோதனையின் போது உரிய கட்டுகள் இரண்டும் உரிய நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன், வாய்க்காலின் மண் இரண்டு இடங்களில் முழுமையாக விலகி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அம்பாந்தோட்டை கொன்னோருவ கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டரங்குடன் கூடிய 05 ஏக்கர் காணியில் 2010/63 ஆம் இலக்க அளவிடை கட்டளையின் பிரகாரம் 03 ஏக்கர் மாத்திரம் அளந்து வேறாக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 02 ஏக்கரை பிரித்து ஒதுக்கி வித்தியாலயத்திற்கு கையளிப்பதற்கு அம்பாந்தோட்டை பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், அவ்வாறு பிரித்து வேறாக்கப்படாதிருந்த 02 ஏக்கர் காணிப் பகுதி நபரொருவரினால் பலவந்தமாக பிடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வலஸ்முல்ல பிரதேச செயலகத்தின் ஓமார கனிஷ்ட வித்தியாலயத்திற்காக கையேற்பதற்கு இருந்த காணியின் பகுதியொன்றில் ஓமார கிழக்கில் குடியிருக்கும் நபரொருவரினால் வீடொன்று நிர்மாணிக்கப்படுகின்றமை கிராம சேவையாளரால் 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிர்மாணத்தை நிறுத்தி அதிலிருந்து வெளியேறுமாறு 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2014 நவம்பர் 10 ஆந் திகதி அளவில் அந்நபர் காணியில் நிரந்தர வீடொன்றை அமைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 07 பிரதேச செயலகங்களினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு எழுதப்பட்டிருந்த ரூபா 1,960,388 பெறுமதியான 205 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன.

**3.13 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 46 | 38 | 08 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 31 | 15 | 16 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,018 | 966 | 116 | 64 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 122 | 114 | 14 | 06 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 62 | - | 61 |
| | மொத்தம் | 1,218 | 1,195 | 154 | 131 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரை 154 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 131 தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.